**கஹவத்த பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கஹவத்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் கஹவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்யையின் 1.6.1 (ஈ) பந்தி தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரியதாக பில்லிடப்பட்ட வியாபார மற்றும் வேலை வரி மீதி ரூபா 536,850 ஆன போதும், பணமாக கிடைத்த ரூபா 396,700 தொகையை பில்லிடலாக காட்டிய காரணத்தால் செயற்பாட்டு மிகை ரூபா 140,150 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொவிட் வைரஸ் காரணமாக அனேக வியாபா இடங்கள் மூடப்பட்டிருந்ததால் குறித்த வருடத்திற்கு பில்லிடும் போது உண்மையாகக் கிடைத்த வருமானத்தை பில்லிடலாக காட்டப்பட்டது. 2022 ஆண்டு முதல் இக் குறையை நிவர்த்தித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 05 கணனி மென்பொருட்களிற்காக செலவிட்டிருந்த ரூபா 84,500 தொகையை சொத்துக்கள் கணக்கிற்கு இரண்டு முறை குறிக்கப்பட்டிருந்தது. | 2022 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிலையான சொத்துக் கொள்வனவுப் பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் பணமாக கிடைத்த ரூபா 317,940 விளம்பர பலகை | ஆண்டிற்குரியதாக கிடைத்துள்ள கட்டணத்தை | அட்டுறு அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| கட்டணம் மற்றும் ரூபா 52,000 சுற்றாடர் அனுமதிப்பத்தர வருமானத்தை பண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஆண்டிற்குரியதாக கணக்கீடு செய்துள்ளதாக. | வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) கடந்த ஆண்டு கணக்காய்வாளர் நாயக அறிக்கையின 1.2 இன் (அ), (ஆ) மற்றும் (இ) கீழ் சுட்டிக் காட்டியிருந்த 04 கணக்கீட்டு குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை சரிசெய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கணக்கு விடயங்கள் 03 இற்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணை பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 388,335 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | 2021 திசெம்பர் 31 திகதி வரை வட்டி கருதுகோளின் மீது கணக்கிட்டுள்ளதால் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,589,825 மீதியொன்றை காட்டுவதாகவும் மற்றும் செலுத்தியுள்ள ரூபா 194,688 ஆன தவணையை அந் நிறுவனத்தால் நிலுவை தவணையாக குறிப்பிட்டதனால் வித்தியசமொன்றை காட்டுவதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அட்டவணையுடன் இணக்கம் செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,861,704 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 8,016,690 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 17 அரச நிறுவனங்களில் ரூபா 96,501 ஆன நிலுவை மீதியொன்று மற்றும் 450 தனியார் அலகுகளில் ரூபா 1,006,409 ஆக 467 வீதவரி அலகுகளிற்குரிய ரூபா 1,102,910 ஆன நிலுவை காணப்பட்டதுடன், அந் நிலுவை | மக்களின் வருமான வழிகள் வீழ்ச்சி அடைந்துள்ளதனை கவனத்திற் கொண்டு நிலுவை வருமானத்தை அறவிடும் நடவடிக்கையை செயற்படுத்தாதிருப்பது பொருத்தமாகும் என சபையினால் ஏகமனதாக தீர்மானித்திருந்த | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதியை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | போதும், தற்போது நடமாடும் சேவை நடாத்தி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | |

(ஆ) அறிவித்தல் பலகை கட்டணம்

---

| | | |
|---|---|---|
| சபையினால் 2021 ஆண்டிற்காக அறிவித்தல் பலகை கணிப்பீடொன்றை மேற்கொண்டு 28 நிறுவனங்களிற்குரிய 28 அறிவித்தல் பலகைகளை இனங்கண்டுள்ளதுடன், அவற்றுள் 08 நிறுவனங்களிற்குரியதாக ரூபா 238,232 தொகை 2020 ஆண்டு முதல் நிலுவையாக உள்ளதுடன், நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இறுதி அறிவித்தல் விநியோகித்துள்ளதாகவும், கொவிட் வைரஸ் நிலைமை காரணமாக பிரயாணத் தடை விதித்திருந்தமை, அலுவலர்களின் வரவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை போன்ற காரணங்களால் குறித்த தொகையை அறவிட முடியாது போயுள்ளதாக. | வருமானத்தை கால ரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பெகோ இயந்திரத்தை தவிசாளரின் அங்கீகாரத்தின் மீது முறையற்ற விதத்தில் வாடகை அடிப்படையில் பல்வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 139.5 இயந்திர மணித்தியாலங்கள் 23 சந்தர்ப்பங்களில் சபையின் அங்கர்தவர்களுக்கு பல்வேறு நடவடிக்கைகளுக்கு சபை தீர்மானமொன்றை பெற்றுக் கொள்ளாது வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டினுள் பெகோ இயந்திரத்தை 06 நபர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கி 25 மணித்தியாலங்கற்காக ரூபா 2,500 வீதம் ரூபா 62,500 வருமானம் கிடைத்திருந்ததுடன்,<br>மீளாய்வாண்டினுள் பெகோ இயந்திர இயக்குனருக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 573,543 உம், எரிபொருள் செலவு ரூபா 262,213 உம் மற்றும் திருத்த செலவு ரூபா 129,875 உமாக கூட்டுத்தொகை ரூபா 392,088 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு சொந்தமான | பெகோ இயந்திரத்தை பொது செயற்பாடுகளிற்காக வழங்கும் போது பொது மக்களின் கோரிக்கையின் பெயரில் பிரிவு அங்கத்தவரினூடாக மதிப்பிற்குரிய தவிசாளரினால் வழங்கப்படுவதாகவும், உதிரிப்பாகங்கள் தேய்வடைந்துள்ளதால் வாகனத்திற்கு முன்னரை விட அதிக செலவொன்றை செய்ய சபைக்கு நேரிட்டுள்ளதாக, சாரதியை பெகோ இயந்திரத்திற்கு மேலதிகமாக டெக்டர் வண்டியை செலுத்தவும் நேரிடுவதாக. | சொத்துக்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது ஒழுங்கான முறையின் கீழ் வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களை வினைத்திறனாகபயன்படுத்தவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கஹவத்த பிரதேச சபை இஸ்தாபிக்கப்பட முன்னர் அடகலன்பன்ன பிரதேச சபைக்கு சொந்தமாக இருந்த எத்தான தவதகனயில் நவநகரில் பெற்றோல் களஞ்சியத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை 1995 மே 24 திகதி நபரொருவருக்கு குத்தகை வழங்கியுள்ளதுடன், குத்தகையாளரினால் 2019 ஜுலை 24 திகதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் இக் கட்டிடத்துடன் கூடிய காணிக்கு உரிதியொன்றை பெற்றக் கொண்டுள்ளதால் இச் சொத்து சபைக்கு இல்லாது போகும் அபாயமொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. மேலும், இக் குத்தகையாளரினால் 2019 ஆண்டு முதல் கணக்காய்வு திகதி 2022 மார்ச் அளவிலும் குறித்த வீட்டு வாடகை மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 112,100 இனை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டியிருந்தது. | பர்சஸ் 22 ஆன காணித் துணிடொன்றை 1995 ஆண்டில் கஹவத்த பிரதேச சபையினால் குத்தகை உடன்படிக்கை ஒன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. குத்தகையாளரினால் 2018 ஆண்டு வரை குத்தகை செலுத்தியுள்ளதுடன் அவ்விடத்திலிருந்து குத்தகை பணம் செலுத்தும் நடவடிக்கையை புறக்கணித்துள்ளர். குாணி 2019 ஜுலை 24 திகதி விற்பனை பத்திரத்தின் மூலம் முறையற்ற விதத்தில் பெற்றுக் கொண்டுள்ளதால் அந் நபர்களுக்கு எதிராக பெல்மடுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக. | வீட்டு வாடகை அறவிட்டு அனுமதியற்ற குடியிறுப்பாளர்களை அகற்றி சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் கழிவுகளை வெளியிட திட்டமொன்றை தயாரித்திருந்த போதும், அதன் பிரகாரம் செயற்பட்டதாக அவதானிக்க்பபடாததுடன், மெட்ரிக் டொன் 855.5 அளவான கழிவுகளை வெளியிட ரூபா 3,537,624 ஆன கிரயமொன்றும், 15 ஆளணி ஊழியர்கள், 06 வாகனங்கள் மற்றும் உபகரணங்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், அக் கழிவுப் பொருட்களை முறையாக மற்றும் சூழல் நேய முறைமையொன்று இல்லாது நிலத்தில் குழிகளை வெட்டி அதனுள் வெளியிட்டு குழிகளை மூடுவதன் மூலம் பல சுற்றாடல் பிரச்சினைகள் எழுத்திருந்தன. | 2003 ஆண்டு முதல் திறக்கப்பட்டு வெளிடப்படுவதாகவும், கழிவுகளை வெளியிடும் காணியை பிரதேச சபைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகளை துரிதமாக்கியுள்ளதுடன் கழிவு மீள்சுழற்ச்சி வேலைத் திட்டத்தை ஆரம்பித்ததன் பின்னர் இக் காணிக்கு வெளியிடப்படும் கழிவுகளின் அளவை படிக்பபடியாக குறைத்துக் கொள்ள திட்டம் தயாரிக்கப்படுவதாக. | கழிவுகளை சுற்றாடல் பாதிப்புக்கள் குறைவடையும் வகையில் வெளியிட நடிக்கை எடுக்க வேண்டும். |